# வேளாண்மை

## பொதுவான போக்குகள்

ஆண்டின் முற்பகுதியில் நிலவிய தொடர்ச்சியான வரட்சியினால் கடுமையான பின்னடைவினை அனுபவித்த வேளாண்மைத்துறை 1992 இல் கலப்பான செயலாற்றத்தைப் பதிவு செய்தது. தேயிலை உற்பத்தி 26 சதவீத கணிசமான வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இறப்பர் உற்பத்தி 1 சதவீதத்தால் சிறிதளவு உயர்வடைந்த வேளையில் தெங்கு உற்பத்தி 9 சதவீத அதிகரிப்பைக் குறித்தது. இதேவேளை, நெல் உற்பத்தி முன்னைய ஆண்டைவிட 2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற துணை உணவுப் பயிர்களின் உற்பத்தி கணிசமானளவு அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த வேளையில் சீனி உற்பத்தி 1992 இல் 10 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. பெரும்பாலான சிறு ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தியும் 1992 இல் அதிகரித்தது.

இவ் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட முக்கிய அமைப்பு மாற்றங்களில் ஒன்று 1992 யூனில் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கும், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கும் சொந்தமான தேயிலை, இறப்பர், தெங்குப் பெருந் தோட்டங்களின் முகாமைத்துவம் தனியார் மயமாக்கப்பட்டதாகும். அரசுக்குச் சொந்தமான 502 பெருந்தோட்டங்களில் 449 தோட்டங்கள் 22 தனியார் முகாமைத்துவக் கம்பனிகளுக்குக் கையளிக்கப்பட்டது. முகாமைத்துவத்தைத் தனியார் மயமாக்கியதன் நோக்கம் பெருந்தோட்டத்துறையின் உற்பத்தியினை அதிகரிப்பதும் தரத்தினை மேம்படுத்துவதும் செலவுகளைக் குறைப்பதுமாகும்.


## முக்கிய ஏற்றுமதிப் பயிர்கள்

### தேயிலை

1991 இல் உச்ச மட்டமான 2,410 இலட்சம் கிலோக்கிறாம்களை அடைந்த தேயிலை உற்பத்தி 1992 இல் 1,790 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 26 சதவீதத்தால் கடுமையாக வீழ்ச்சியடைந்தது. இது 1956 இலிருந்து பதிவு செய்யப்பட்டதில் ஆகக் குறைந்த மட்டமாக இருந்தது. ஆண்டின் முதற் பகுதியில் தொடர்ந்து நிலவிய வரட்சி இப்பாதகமான உற்பத்திச் செயலாற்றத்திற்குக் காரணமாயமைந்தது. எல்லா மூன்று உயர வகைகளினதும் உற்பத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தது. 1991 இல் 1,160 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 11 சதவீதத்தால் அதிகரித்த தாழ்நிலத் தேயிலையின் உற்பத்தி 1992 இல் 870 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 25 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. உயர், மத்தியநிலத் தேயிலைகளும் 27 சதவீதத்தாலும், 26 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்து முறையே 540 இலட்சம் கிலோக்கிறாம்களாகவும் 380 இலட்சம் கிலோக்கிறாம்களாகவும் விளங்கின. கடந்த சில ஆண்டுகளாக உறுதியாக உயர்வடைந்த வெ.கி.சு. (வெட்டிக் கிழித்துச் சுருட்டப்பட்ட) தேயிலையின் உற்பத்தியும் 1992 இல் 23 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 51 இலட்சம் கிலோக்கிறாம்களாக விளங்கியது. முன்னைய ஆண்டைப் போலவே வெ.கி.சு. தேயிலை 1992 இன் மொத்த உற்பத்தியில் 3 சதவீதத்திற்கு மட்டும் வகை கூறியது.

ம.தோ.அ. சபைக்கும், இ.அ.பெ. கூட்டுத்தாபனத்திற்கும் சொந்தமான 94,541 எக்டேயர்களை உள்ளடக்கிய எல்லாமாக 356 தேயிலைத் தோட்டங்கள்

## முதன்மை வேளாண்மைப் பயிர்களின் உற்பத்தி




இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை 1.9

## தேயிலைத் துறையின் மீதான புள்ளி விபரங்கள் 1990 — 1992

| விடயம் | அலகு | 1990 | 1991(அ) | 1992(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி | ப. இ. கி. கிறாம்கள் | 233.2 | 240.7 | 178.9 |
| 1.1. உயர்நிலம் | ,, | 76.1 | 73.2 | 53.7 |
| 1.2. மத்திய நிலம் | ,, | 51.9 | 51.3 | 37.9 |
| 1.3. தாழ்நிலம் | ,, | 105.1 | 116.2 | 87.3 |
| 2. தேயிலை பயிரிடப்பட்ட பரப்பு | '000எக்டேயர்கள் | 222 | 222 | 222 |
| 3. வளமாக்கி வழங்கல்கள் | '000மெ.தொன்கள் | 134.1 | 118.9 | 108.8 |
| 4. மீளப்பயிரிடல் | எக்டேயர்கள் | 1,586 | 1,773 | 1,417 |
| 5. விலைகள் | | | | |
| 5.1. கொழும்பு தேறிய | ரூபா/கி.கி. | 65.72 | 57.13 | 60.51 |
| 5.2. ஏற்றுமதி க. ஏ. பெ. | ,, | 91.78 | 84.03 | 81.50 |
| 6. உற்பத்திச் செலவு | ,, | 60.54 | 60.68 | 62.26 |
| 7. ஏற்றுமதிகள் | ப. இ. கி. கி. | 216.0 | 212.4 | 181.7 |
| 8. ஏற்றுமதி வருவாய்கள் | (ரூ. ப. இ.) | 19,823.3 | 17,866.8 | 14,893.4 |
| | (சிஎஉ. ப. இ.) | (364) | (316) | (241) |
| 9. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (இ) | | 4.4 | 3.4 | 2.2 |

மூலங்கள்: இலங்கைத் தேயிலைச்சபை,
தேசிய வளமாக்கிச் செயலகம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) பயிரிடலும் பதனிடலும் மட்டும்.

இவ்வாண்டில் தனியார் முகாமைத்துவக் கம்பனிகளுக்குக் கையளிக்கப்பட்டன. இரண்டு அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களும் மொத்தமாக 312 தேயிலைத் தொழிற்சாலைகளைத் தனியார் முகாமைத்துவக் கம்பனிகளுக்குக் கையளித்தன.

1991 இல் 11 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 118,900 மெற்றிக் தொன்களாக விளங்கிய தேயிலைத்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள், 1992 இல் மேலும் 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 108,800 மெற்றிக் தொன்களாக விளங்கின. ஆண்டின் முதற்பகுதியில் நிலவிய கடுமையான வரட்சி நிலைமைகளுடன் தேயிலையின் மந்தமான விலை என்பன 1992 இன் வளமாக்கிப் பயன்பாட்டின் குறைவிற்குக் காரணமாகின.

1992 இல் தேயிலைப் பயிர்ச்செய்கையின் கீழ் பதிவு செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 221,836 எக்டேயர்களாகும். இது முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பினைவிட 145 எக்டேயர்கள் அதிகமானதாகும். பதிவு செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பில் 28 சதவீதம் அல்லது 61,371 எக்டேயர்கள் சிறு உடைமைகளின் கீழ் இருந்தன.

இவ்வாண்டில் மீளப் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பு 20 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 1,417 எக்டேயர்களாக விளங்கியது. இதேவேளை கடந்த மூன்றாண்டுகளாக உறுதியாக அதிகரித்து வந்த புதிய பயிரிடுகையின் கீழ்க் கொண்டு வரப்பட்ட நிலப்பரப்பு 1992 இல் மேலும் 31 சதவீதத்தால் 1,386 எக்டேயர்களுக்கு அதிகரித்தது.

வேறுபட்ட உயரவகைகளின் மீளப் பயிரிடல் மற்றும் புதிதாகப் பயிரிடல் நடவடிக்கைகளுக்கான உதவுதொகைக் கொடுப்பனவுகளில் 1992 இல் மாற்றங்களெதுவும் காணப்படவில்லை. 1992 இல் புதிய பயிரிடல் மீளப் பயிரிடல் என்பவற்றுக்கான மொத்த உதவுதொகைக் கொடுப்பனவுகள் முறையே ரூ. 320 இலட்சமாகவும் ரூ. 390 இலட்சமாகவும் விளங்கின. 1991 இல் மூன்று மடங்கிற்கும் மேலான அதிகரிப்பைப் பதிவு செய்த தேயிலைத் தொழிற்சாலை அபிவிருத்தி உதவுதொகைத் திட்டத்தின் கீழான பகிர்ந்தளிப்புக்கள் 1992 இல் மேலும் 18 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 840 இலட்சமாக விளங்கின.

1992 இல் தயாரிக்கப்பட்ட தேயிலையின் சராசரி உற்பத்திச் செலவு (உ.செ.) கிலோக்கிறாமொன்றிற்கு ரூ. 72.26 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. இது முந்திய ஆண்டின் உ. செலவினைவிட 19 சதவீதம் அதிகமானதாகும். உ. செலவின் இக் குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்குச் சாதகமற்ற காலநிலை நிலைமைகளின் காரணமாக உற்பத்தியில் ஏற்பட்ட கணிசமானளவு வீழ்ச்சியே காரணமாகும்.

1991 யூனிலிருந்து கீழ்நோக்கி அசைந்த தேயிலை விலைகள் குறிப்பாக 1992 இன் இரண்டாமரைப்பகுதியில் மிதமான மீட்சியைக் காட்டின. இதன்படி கொழும்பு ஏலங்களில் அனைத்துத் தேயிலைகளினதும் சராசரி மொத்த விலை 1992 இல் 6 சதவீதத்தால் அதிகரித்து கிலோக்கிறாம் ஒன்று ரூ. 61.75 ஆக விளங்கியது. எனினும் 1991 இல் 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த சராசரி ஏற்றுமதி (க.ஏ.பெ.) விலை 1992 இல் மேலும் 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து கிலோக்கிறாம் ஒன்று ரூ. 81.50 ஆக விளங்கியது. கொழும்பு ஏல விலை அதிகரித்தபோதிலும், ஏற்றுமதி (க.ஏ.பெ.) விலை வீழ்ச்சியடைந்தமைக்கு 1991 இன் பிற்பகுதியிலும் 1992 இன் முதல் அரைப் பகுதியிலும் தேயிலை விலைகள் குறைவாக விளங்கியபோது கொள்வனவு செய்யப்பட்ட தேயிலைகளின் க.ஏ.பெ. விலைகளின் காலம் தாழ்ந்த விளைவே காரணமாகும்.

தேயிலைக் கைத்தொழிலுக்கு நிவாரணம் வழங்கும் நோக்குடன் 1992 நவெம்பரில் ஏற்றுமதித் தீர்வைகள் மேலும் குறைக்கப்பட்டன. 1992 திசெம்பர் 21 ஆம் நாளிலிருந்து எல்லா ஏற்றுமதித் தீர்வைகளும் பெறுமான விகித விற்பனை வரியும் முற்றாக ஒழிக்கப்பட்டது. பெறுமான விகித விற்பனை வரி நீக்கப்பட்டமை தரமான தேயிலைகளின் உற்பத்தியை ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. 1992 இல் தேயிலை இறைத் தீர்வை கிலோக்கிறாமுக்கு ரூ. 2.00 ஆக மாற்றமின்றியிருந்தது.

இவ்வாண்டில் நிலவிய முன் என்றுமில்லாத வரட்சி நிலைமைகள் மற்றும் மந்தமான விலைகள் என்பவற்றால் கடுமையான இன்னல்களை எதிர்நோக்கிய தேயிலைப் பயிர் செய்பவர்களுக்கும் தொழிற்சாலைச் சொந்தக்காரர்களுக்கும் நிவாரணம் வழங்கும் நோக்குடன் ஆய்விற்குரிய ஆண்டில் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் பல திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. தேயிலைக்கான சமநிலைப்படுத்தும் நிதியத்திலிருந்து கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியங்களுடன்கிட்டத்தட்ட ரூ. 420 இலட்சம் பெறுமதி கொண்ட நிவாரண வழிமுறை இவ்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் கீழ் வரட்சியினால் பாதிக்கப்பட்ட தேயிலை நிலப்பரப்பில் மீளப் பயிரிடுகைகளை மேற்கொள்வதற்காக எக்டேயர் ஒன்றுக்கு ரூ. 10,000 என்ற வீதத்தில் சிறு உடைமையாளர்களுக்குப் பணம் செலுத்தப்பட்டது. மேலும் வரட்சிக் காலத்தில் விளைச்சலில் ஏற்பட்ட இழப்பிற்

காகத் தேயிலை சிறு உடைமைகளுக்குத் தேயிலை இறைத் தீர்வை நிதியத்திலிருந்து இழப்பீட்டுக் கொடுப்பனவாக மொத்தம் ரூ. 850 இலட்சம் வழங்கப்பட்டது.

தனியார்துறைத் தேயிலைத் தொழிற்சாலைச் சொந்தக்காரருக்குத் தேயிலை விலை வீழ்ச்சியினாலும் தேயிலைக் கொழுந்தின் குறைந்தளவு கொள்வனவினாலும் ஏற்பட்ட கடினமான தொழிற்படும் மூலதனப் பிரச்சினையிலிருந்து விடுபடுவதற்கானதொரு நிவாரண வழிமுறையாக வர்த்தக வங்கிகள் மூலமும், தேயிலைத் தரகர்கள் மூலமும் சிறப்பான ஒரு கடன் உதவியாக ரூ. 4500 இலட்சம்வழங்கப்பட்டது. மேற்கூறப்பட்ட கடன் மீதான வட்டிச் செலவில் ஐம்பது சதவீதம் தேயிலைக்கான சமநிலைப்படுத்தும் நிதியத்தினால் (தே.ச.நி.) தாங்கப்பட்டதுடன் இவ்வட்டி உதவுதொகை மீதான தே.ச. நிதியத்தின் மொத்தச் செலவு ரூ. 1,000 இலட்சம் வரையில் அமையலாம்.

இதேவேளை பன்னாட்டு தேயிலைச் சந்தையில் உயர்ந்த கேள்வியைக் கொண்ட வெட்டிக் கிழித்துச் சுருட்டப்பட்ட தேயிலையின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் இலங்கைத் தேயிலைச் சபை உதவுதொகைத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியது. இத் திட்டத்தின் கீழ் புதிய வெ.கி.சு. தேயிலைத் தொழிற்சாலையின் கட்டிடவேலைக்கான பொறியின் செலவில் 70 சதவீதம் இலங்கைத் தேயிலைச் சபையினால் தாங்கப்பட்டது.

**இறப்பர்**

1992 இல் இறப்பர் உற்பத்தி 1,050 இலட்சம் கிலோக்கிறாம்களெனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது முன்னைய ஆண்டினதைவிட 1 சதவீதங் கொண்ட சிறிதளவு அதிகரிப்பாகும். ஆண்டின் முதற் பகுதியில் நிலவிய வரட்சி நிலைமையும் அதனைத் தொடர்ந்து யூன், யூலை மாதங்களில் ஏற்பட்ட அதிகளவான மழையும் சில நிலப்பரப்பில் பாலெடுப்போருக்கான தட்டுப்பாடும் ஈர வலயத்தில் உள்ள பொருளாதார வகையில் நன்மையினைப் பெற முடியாதிருந்த சில இறப்பர் நிலப்பரப்பு தேயிலைப் பயிர்ச்செய்கைக்குத் திருப்பப்பட்டமையும் இறப்பர் உற்பத்தியின் பின்தங்கிய செயலாற்றத்திற்குப் பொறுப்பான காரணிகளுள் சிலவாகும்.

1992 இல் தொழில்நுட்ப ரீதியில் பாகுபடுத்தப்பட்ட இறப்பர், சோல் கிறேப், குறிப்பிடப்படாத தரங்களில் உள்ள இறப்பர் ஆகியவற்றின் உற்பத்தி அதிகரித்தது. மொத்த உற்பத்தியில் 17 சதவீதத்திற்கு வகைகூறும் தொழில்நுட்ப ரீதியில் பாகுபடுத்தப்பட்ட இறப்பரின் உற்பத்தி இரண்டு மடங்கிற்கும் அதிகமான அதிகரிப்பைப் பதிவுசெய்து 180 இலட்சம் கிலோக்கிறாம்களாக விளங்கிய வேளையில் சோல் கிறேப்பின் உற்பத்தி 20 சதவீதத்தால் உயர்வடைந்து 30 இலட்சம் கிலோக்கிறாம்களாக விளங்கியது. மாறாக, மொத்த உற்பத்தியில் 42 சதவீதத்திற்கு வகைகூறும் தட்டை இறப்பர் உற்பத்தி 14 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 440 இலட்சம் கிலோக்கிறாம்களாக விளங்கியவேளையில் கழிவு இறப்பரும் லேட்டெக்ஸ் கிறேப்பும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 20 சதவீதத்தாலும், 10 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்து முறையே 60 இலட்சம் கிலோக்கிறாம்களாகவும் 260 இலட்சம் கிலோக்கிறாம்களாகவும் விளங்கின.

1992 இல் இறப்பர்த்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 12,700 மெற்றிக் தொன்களாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 7 சதவீத வீழ்ச்சியைக் காட்டின.

அட்டவணை 1.10

## இறப்பர்த்துறை மீதான புள்ளி விபரங்கள் 1990—1992

| விடயம் | அலகு | 1990 | 1991(அ) | 1992(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி ... | ப. இ. கி. கி. | 113.1 | 103.9 | 105.0 |
| 2. பரப்பளவு | | | | |
| 2.1. பயிர்ச் செய்கைக்குட்பட்ட ... | '000 எக்டேயர்கள் | 199 | 198.5 | 197.9 |
| 2.2. பால் எடுக்கும் ... | ,, | 146.3 | 147.0 | 148.2 |
| 3. விளைச்சல் . ... | கி. கி. /எக்டேயர் | 773 | 706 | 708 |
| 4. வளமாக்கி வழங்கல்கள் ... | '000மெ. தொன்கள் | 22.2 | 13.7 | 12.7 |
| 5. மீள்நடுகை ... | எக்டேயர்கள் | 5,202 | 5,190 | 1,722(இ) |
| 6. விலைகள் ... | | | | |
| 6.1 ஏற்றுமதிகள் க. ஏ. பெ. ... | ரூ. / கி. கி | 35.50 | 34.55 | 37.65 |
| 6.2 கொழும்பு ஆர். எஸ். எஸ். 1 ... | ,, | 22.93 | 23.59 | 29.28 |
| 7. உற்பத்திச் செலவு (ஈ) ... | ,, | 17.92 | 19.11 | 20.50 |
| 8. ஏற்றுமதிகள் ... | ப. இ. கி. கி. | 86.8 | 76.4 | 78.6 |
| 9. உள்நாட்டு நுகர்வு ... | ,, | 23.6 | 26.8 | 28.50 |
| 10. ஏற்றுமதி வருவாய்கள் ... | ரூ. ப. இ. | 3,080.2 | 2,641.2 | 2,959.9 |
| | (சி.எ.உ. ப. இ.) | (57) | (47) | (48) |
| 11. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (உ) ... | | 1.1 | 1.0 | 1.0 |

மூலங்கள்: இறப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களம்.
தேசிய வளமாக்கிச் செயலகம்.
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) தனியார்துறை மட்டும்.
(ஈ) தனியார்துறையின் தோட்டங்களினதும் சிறு உடைமைகளினதும் உற்பத்திச் செலவின் நிறையேற்றப்பட்ட சராசரி.
(உ) பயிர் வளர்த்தலும், பதனிடலும் மட்டும்.

பாலெடுத்தலின் கீழான நிலப்பரப்பு 1991 இன் 147,000 எக்டேயர்களிலிருந்து 148,000 எக்டேயர்களுக்குச் சிறிதளவால் அதிகரித்தபோதிலும் இறப்பர் உற்பத்தியின் கீழ் பதிவு செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 1992 இல் 600 எக்டேயர்களினால் சிறிதளவு வீழ்ச்சியடைந்து 197,900 எக்டேயர்களாக விளங்கியது. இதேவேளை ஒரு எக்டேயருக்கான சராசரி விளைச்சல் 1991 இன் 706 கிலோக்கிறாம்களிலிருந்து சிறிதளவு அதிகரிப்பைப் பதிவுசெய்து 1992 இல் 708 கிலோக்கிறாம்களாக விளங்கியது.

எல்லாத் தரங்களிலுமான இறப்பரின் சராசரி ஏற்றுமதி (க.ஏ.பெ.) விலை 1991 இன் கிலோக்கிறாம் ஒன்றிற்கு ரூ. 34.55 இலிருந்து 9 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்து 1992 இல் கிலோக்கிறாம் ஒன்று ரூ. 37.65 ஆக விளங்கியது. கொழும்பு ஏலங்களில் ஆர்.எஸ்.எஸ். 1 இன் சராசரி விலை 24 சதவீதத்தால் உயர்வடைந்து கிலோக்கிறாம் ஒன்று ரூ. 29.28 ஆக விளங்கியவேளையில் ஆர்.எஸ்.எஸ். 2 இன் சராசரி விலை 26 சதவீதத்தால் அதிகரித்துக் கிலோக்கிறாம் ஒன்று ரூ. 28.89 ஆக விளங்கியது.

1992 நவெம்பர் 7 ஆம் நாளிலிருந்து சிறு உடைமையாளர்களுக்குச் சிறந்த உற்பத்தியாளர் இலாபத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு கிலோக்கிறாம் ஒன்றின் அடிமட்ட விலையான ரூ. 23.00 இல் நிலையான தீர்வையாக இருந்த கிலோக்

கிறாம் ஒன்றுக்கு ரூ. 2.00 நீக்கப்பட்டு இறப்பர் ஏற்றுமதித் தீர்வை திருத்தியமைக்கப்பட்டது. 1991 ஒற்றோபரில் 50 சதவீதத்திலிருந்து 30 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்ட இறப்பர் மீதான ஏற்றுமதித் தீர்வை 1992 திசெம்பர் 22 ஆம் நாளிலிருந்து நீக்கப்பட்டது.

சிறு உடைமைகளை உள்ளடக்கிய தனியார்துறையில் இறப்பரின் உற்பத்திச் செலவு (உ.செ.) 1991 இன் கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ. 19.11 இலிருந்து 1992 இல் கிலோக்கிறாம் ஒன்றிற்கு ரூ. 20.50 ஆக 7 சதவீதத்தால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இறப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளின்படி இறப்பரின் உள்நாட்டு நுகர்வு 1992 இல் 6 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்து 285 இலட்சம் கிலோக்கிறாம்களாக விளங்கியது. இது இவ்வாண்டில் மொத்த இறப்பர் உற்பத்தியில் 27 சதவீதத்திற்கு வகைகூறியது. இறப்பரின் உயர்ந்த மட்டத்திலான உள்நாட்டு நுகர்வு நாட்டின் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புத்துறையின் விரிவாக்கத்தினைப் பிரதிபலிக்கின்றது.

**தெங்கு**

1991 இல் 14 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்த தெங்கு உற்பத்தி 1992 இல் 9 சதவீதத்தால் அதிகரித்து 23,800 இலட்சம் காய்களாக விளங்கியது. தெங்கு உற்பத்தியில் ஏற்பட்ட முன்னேற்றம் 1991 இல் நிலவிய சார்புரீதியில் சாதகமான கால நிலைமைத் தன்மைகளின் காலம்தாழ்ந்த தாக்கத்தினால் ஏற்பட்டதாகும்.

தேங்காய்த்துருவலின் தேங்காய்க்குச் சமமான உற்பத்தி 1991 இன் 3,350 இலட்சம் காய்களிலிருந்து 1992 இல் 3,650 இலட்சம் காய்களுக்கு 9 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் தேங்காய் எண்ணெய்க்குச் சமமான காய்கள் 1991 இன் 2,600 இலட்சம் காய்களிலிருந்து 1992 இல் 3,440 இலட்சம் காய்களுக்கு 32 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும் உலர்த்திய தேங்காய் ஏற்றுமதிக்குச் சமமான காய்கள் 1991 இல் பதிவு செய்யப்பட்டிருந்த 380 இலட்சம் காய்களிலிருந்து 280 இலட்சம் காய்களுக்கு 26 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் உடன் காய்களின் ஏற்றுமதிகள் 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 1992 இல் 230 இலட்சம் காய்களாக விளங்கியது.

பல்வேறு உதவுதொகைத் திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பயிரிடல் நடவடிக்கைகள் முன்னைய ஆண்டினைப் போலவே 1992 இலும் பின்னடைவினைக் கொண்டிருந்தன. 1992 இல் புத்தாக்கம் செய்யப்பட்ட தெங்கு நிலங்களின் பரப்பளவு 2,873 எக்டேயர்களுக்கு 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

புதிதாகத் தெங்கு பயிரிடப்பட்ட பரப்பளவு முன்னைய ஆண்டின் 10 சதவீத வீழ்ச்சியிலிருந்து 1992 இல் மேலும் 37 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 637 எக்டேயர்களாக விளங்கியது. 1991 இல் 24 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த கீழ் நடுகைக்கும், மீள் நடுகைக்கும் உட்பட்ட நிலரப்பரப்பு 1992 இல் மேலும் 23 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 1,590 எக்டேயர்களாக விளங்கியது. ஆண்டின் முற்பகுதியில் நிலவிய கடுமையான வரட்சி நிலைமைகள் பயிர்ச்செய்கை நடவடிக்கையில் பாதகமான தாக்கத்தைக் கொண்டிருந்தன.

### அட்டவணை 1.11

### தெங்குத்துறை மீதான புள்ளி விபரங்கள் 1990—1992

| விடயம் | அலகு | 1990 | 1991 (அ) | 1992(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி (இ) ... | ப. இ. காய்களில் | 2,532 | 2,184 | 2,380 |
| 1.1. தேங்காய்த் துருவல் ... | ப. இ. காய்களில் (ஈ) | 376 | 335 | 365 |
| 1.2. தேங்காய் எண்ணெய் ... | ப. இ. காய்களில் (ஈ) | 598 | 260 | 344 |
| 1.3. உலர்த்திய தேங்காய் (உ) .. | ப. இ. காய்களில் (ஈ) | 36 | 38 | 28 |
| 1.4. உடன்காய் ஏற்றுமதிகள் ... | ப. இ. காய்களில் | 22 | 24 | 23 |
| 1.5. உள்நாட்டு தேங்காய் நுகர்வு (ஊ)... | ப. இ. காய்களில் | 1,530 | 1,552 | 1,620 |
| 2. சராசரி ஏற்றுமதிவிலை (க எ. பெ.) (எ) | காய்க்கு ரூபா | 3.63 | 4.54 | 6.61 |
| 3. வளமாக்கி வழங்கல்கள் ... | '000 மெ. தொ. | 27.80 | 28.80 | 33.8 |
| 4. உற்பத்திச் செலவு ... | காய்க்கு ரூபா | 1.11 | 1.70 | 1.97 |
| 5. மீள் பயிரிடல்/கீழ் பயிரிடல் (ஏ) ... | எக்டேயர்கள் | 2,724 | 2,057 | 1,589 |
| 6. புதிய பயிரிடல் (ஏ) ... | எக்டேயர்கள் | 1,120 | 1,009 | 637 |
| 7. ஏற்றுமதி வருவாய்கள் ... | ப. இ. ரூபா | 2,783 | 2,619 | 3,691 |
| | (சிஎஉ ப. இ.) | (51) | (46) | (60) |
| 7.1. உள்ளீட்டு உற்பத்திகள் (எ) ... | ப. இ. ரூபா | 1,843 | 1,769 | 2,665 |
| | (சிஎஉ. ப. இ.) | (34) | (31) | (43) |
| 7.2. ஏனைய உற்பத்திகள் ... | ப. இ. ரூபா | 941 | 850 | 1,026 |
| | (சிஎஉ. ப. இ.) | (17) | (15) | (17) |
| 8. மொ. உ. உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (ஐ) ... | | 1.9 | 2.5 | 3.0 |

மூலங்கள்: தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை,
தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபை,
தேசிய வளமாக்கிச் செயலகம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தியமைக்கப்பட்டது.

(ஆ) தற்காலிகமானவை

(இ) மதிப்பீடு (உலர்த்திய தேங்காய் இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு சீராக்கஞ் செய்யப்படுவதன் காரணமாக பகுப்பாய்வின் கூட்டுத்தொகை மொத்தத்துடன் ஒத்திருக்கமாட்டாது.)

(ஈ) தேங்காய்க்குச் சமனான ஒரு — மெற். தொன் தேங்காய்த் துருவல் = 6,800 காய்கள்.
— மெற். தொன் எண்ணெய் = 8,000 காய்கள்.
— மெற். தொன் உலர்த்திய தேங்காய் = 4,925 காய்கள்.

(உ) ஏற்றுமதிகள் மட்டும்.

(ஊ) தலைக்குரிய வீட்டு நுகர்வு ஆண்டுக்கு 90 காய்களென்ற அடிப்படையில் மதிப்பிடப்பட்டது. 1991 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுக்கான தலைக்குரிய காய்கள் 94.8 என மதிப்பிடப்பட்டது. கைத்தொழிலுக்கு பயன்பட்டவை தவிர.

(எ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்.

(ஏ) விபரமான தரவுகள் கிடைக்காமையின் காரணமாக 0.4 எக்டேயர்களுக்கும் குறைவான உடைமைகளில் மேற்கொள்ளப்பட்ட பயிரிடல் நடவடிக்கைகளை இது உள்ளடக்கவில்லை.

(ஐ) உற்பத்தி செய்தலும் பதனிடலும் மட்டும்.

முந்திய ஆண்டில் 35 சதவீதத்தினால் அதிகரித்த இடைப்பயிர்களைக் கொண்ட தெங்குப் பயிர்ச்செய்கை நிலப்பரப்பு 1992 இல் மேலும் 30 சதவீதத்தினால் விரிவடைந்து 35 எக்டேயர்களாக விளங்கியது. எனினும், இவ்வாண்டில் கோப்பி, மிளகு என்னும் இரண்டையும் இடைப் பயிர்களாகக் கொண்ட நிலப்பரப்பு 88 சதவீதத்தாலும், 60 சதவீதத்தினாலும் கணிசமாக வீழ்ச்சியடைந்து முறையே 5 எக்டேயர்களாகவும், 33 எக்டேயர்களாகவும் விளங்கியது.

1991 இல் 22 சதவீதத்தால் அதிகரித்த தெங்குத் துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 1992 இல் மேலும் 17 சதவீதத்தால் உயர்வடைந்து 33,800 மெற்றிக் தொன்களாக விளங்கியது. எனினும், தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் (தெ.ப.ச.) வளமாக்கிக் களஞ்சியத்தினால் வழங்கப்பட்ட வளமாக்கி இவ்வாண்டில் 9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 1,876 மெற்றிக் தொன்களாக விளங்கியது. தெ.ப. சபையினால் பேணப்பட்ட நாற்று மேடைகளின் எண்ணிக்கை 1991 இன் 33 இலிருந்து 1992 இல் 27 இற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், இவ் வாண்டில் வழங்கப்பட்ட நாற்றுக் கன்றுகள் 23 சதவீதத்தால் அதிகரித்து 16.2 இலட்சம் நாற்றுக் கன்றுகளாக விளங்கின.

1991 இல் கொழும்புச் சந்தையில் 57 சதவீதத்தால் உயர்வடைந்த உடன் காய்களின் சராசரி விலை 1992 இல் மேலும் 33 சதவீதத்தால் அதிகரித்துக் காயொன்றுக்கு ரூ. 4.25 ஆக விளங்கியது. முந்திய ஆண்டில் 33 சதவீதத்தால் உயர்வடைந்த மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் சராசரி ஏற்றுமதி (க.ஏ.பெ.) விலை மேலும் 46 சதவீதத்தால் அதிகரித்து 1991 இன் காயொன்றுக் கான ரூ. 4.54 இலிருந்து 1992 இல் காயொன்றுக்கு ரூ. 6.61 ஆக விளங்கியது. 1992 இல் காயொன்றுக்கு ரூ. 1.97 ஆகப் பதியப்பட்ட சராசரி உற்பத்திச் செலவு முன்னைய ஆண்டைவிட 16 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

தேங்காய்த் துருவல் ஆலை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஆலைச் சொந்தக்காரருக்கு நவீனப் பொறிகளையும் கருவிகளையும் நிறுவுவதற்காக ஆலை அபிவிருத்தி நிதியத்திலும் இறைத் தீர்வை நிதியத்திலுமிருந்து நிதியங்களைத் தொடர்ந்து கிடைக்கச் செய்தது. 1992 திசெம்பர் 21 ஆம் நாளிலிருந்து தெங்கு உற்பத்திகள் மீதான ஏற்றுமதி வரிகள் அனைத்தும் நீக்கப்பட்டன.

**ஏனைய வேளாண்மை உற்பத்திகள்**

**சிறு ஏற்றுமதிப் பயிர்கள்**

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் முக்கியமாக ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யப்படும் பரந்த அளவில் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த வாசனைச் சரக்குகள் மற்றும் குடிபானப் பயிர்களை உள்ளடக்கியுள்ளன. இப்பயிர்களில்வெ பரும் பாலானவை வீட்டுத் தோட்டங்களிலும் சிறு உடைமைகளிலும் முக்கியமாகக் கலப்புப் பயிர்களாகவே பயிரிடப்படுகின்றன. ஆகவே இப்பயிர்களின் கீழான நிலப்பரப்பு மற்றும் அவற்றின் உற்பத்தி மீதான சரியான தரவுகளைப் பெறுவது கடினமாகும். எனினும், இப்பயிர்களின் உற்பத்தியில் பெரும் தொகையானவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்ற உண்மையின் அடிப்படையில் ஏற்றுமதி அளவுகள் உற்பத்திகளுக்கான பதிலீடுகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. சிறு ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்திகளின் உள்நாட்டு நுகர்வு மற்றும் இருப்பு மாற்றங்கள் என்பன மிகச் சிறிதளவாகவே இருக்குமெனக் கருதுவதினால் இவற் றின் உற்பத்தி மதிப்பீடுகள் ஓரளவு தற்காலிகமானவையாகும்.

கொக்கோ தவிர்ந்த ஏனைய முக்கியமான சிறு ஏற்றுமதிப் பயிர் களில் பெரும்பாலானவற்றின் உற்பத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடு கையில் 1992 இல் அதிகரித்துள்ளதாக ஏற்றுமதித் தரவுகள் காட்டு கின்றன. மொத்தச் சிறு ஏற்றுமதிப் பயிர்களில் மிகப் பெரும் பங் கிற்கு வகை கூறிய கறுவா ஏற்றுமதிகள் முன்னைய ஆண்டின் 10,185 மெற்றிக் தொன்களிலிருந்து 1992இல் 10,408 மெற்றிக் தொன்களுக்கு 2 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. கோப்பி, மிளகு, ஏலம் என்பவற்றின்

ஏற்றுமதி அளவுகளும் முறையே 8 சதவீதத்தாலும், 9 சதவீதத்தாலும், 7 சத வீதத்தாலும் அதிகரித்து 1992 இல் முறையே 3,608 மெற்றிக் தொன்களாகவும், 2,506 மெற்றிக் தொன்களாகவும், 1,395 மெற்றிக் தொன்களாகவும் விளங்கின. எனினும், கொக்கோவின் ஏற்றுமதி அளவுகள் 3 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்து 1,308 மெற்றிக் தொன்களாக விளங்கின.

1992 இல் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 35 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்து 7,200 மெற்றிக் தொன்களாக விளங்கின. மிளகு, கோப்பி, கொக்கோ, கறுவா ஆகிய நான்கு தெரிந்தெடுக்கப்பட்ட பயிர்கள் தொடர்பான வளமாக்கிப் பயன் பாட்டை மேம்படுத்தி ஊக்குவிக்கும் வளமாக்கிச் சிக்கன செயல்முறை விளக்க நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ்த் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு ஏற்றுமதிப் பயிர்கள் துறைக்கு ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களம் இவ்வாண்டில் 3,497 மெற்றிக் தொன் வளமாக்கியை வழங்கியது.

ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தரவுகளின் படி 1992 இல் முக்கிய சிறு ஏற்றுமதிப் பயிர்களின் கீழுள்ள நிலப்பரப்பு 66,899 எக்டேயர்களுக்கு 1 சதவீதத்தால் அதிகரித்தது. 1992 இல் மிளகின் கீழான நிலப்பரப்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5 சதவீதத்தால் விரிவடைந்து 10,502 எக்டேயர்களாக விளங்கியது. ஆய்விற்குரிய காலத்தில் கொக்கோ, கோப்பி, ஏலம் என்பனவற்றின் கீழுள்ள நிலப்பரப்பும் சிறிதளவு அதிகரிப்பைக் காட்டியது.

1992 இல் ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களம் சிறு ஏற்றுமதிப் பயிர் களின் பயிரிடல் நடவடிக்கைகளின் மேம்பாட்டிற்காக உதவித் திட்டத்தினைத் தொடர்ந்தும் தொழிற்படுத்தியது. ஏற்றுமதி வேளாண்மைப் பயிர் உதவித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பயிரிடல் நடவடிக்கைகள் 1992 இல் வீழ்ச்சியடைந்தன. ஏற்றுமதி வேளாண்மை உதவித் திட்டத்தின் கீழ் 1992 இல் புதிதாகப் பயிரிடல், மீளப் பயிரிடல் என்பனவற்றின் கீழ்க் கொண்டு வரப்பட்ட மொத்த நிலப்பரப்பு 39 சதவீதத்தாலும், 33 சதவீதத்தாலும் முறையே 671 எக்டேயர்களுக்கும், 76 எக்டேயர்களுக்கும் வீழ்ச்சியடைந்தது. 1992 இல் கோப்பி, மிளகு, கொக்கோ என்பன புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 49 சதவீதத்தாலும், 36 சத வீதத்தாலும், 6 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. கறுவா தொடர்பாகப் புத்தாக்கம் செய்யப்பட்ட நிலப்பரப்பு 1991 இன் 542 எக்டேயர்களிலிருந்து 1992 இல் 476 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்து 12 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்த வேளையில் ஆய்விற்குரிய காலத்தில் கொக்கோ தொடர்பாகப் புத்தாக்கம் செய்யப்பட்ட நிலப்பரப்பு 19 எக்டேயர்களிலிருந்து 31 எக்டேயர்களுக்கு அதி கரித்து 67 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. ஏற்றுமதி வேளாண்மை உதவித் திட்டத்தின் கீழ் 1992 இல் மொத்தமாகச் செலுத்தப்பட்ட உதவுதொகை 18 சதவீதத்தினால் அதிகரித்து ரூ. 200 இலட்சமாக விளங்கியது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் 1989 இல் கேகாலை, கண்டி, மாத்தளை, பதுளை, மொனராகலை மாவட்டங்களில் தொடங்கப்பட்ட மத்திய நில நீண்ட காலப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம் 1992 இலும் அதன் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தது. வாசனைத் திரவியங்கள், பழங்கள், குடி பானப் பயிர்கள் என்பவற்றின் வர்த்தக உற்பத்தியை மேம்படுத்துவதனையும்

முக்கிய ஏற்றுமதிப் பயிர்களான மிளகு, சாதிக்காய், கொக்கோ, கோப்பி, ஏலக்காய் போன்ற நீண்ட காலப் பயிர்களின் மொத்த விற்பனைச் சந்தை வசதி களை முன்னேற்றுவதனையும் அறுவடைக்குப் பிந்திய சிறந்த கையாளல் மற்றும் பதனிடல் தொழில்நுட்பம் என்பனவற்றை அறிமுகப்படுத்துவதனூடாக உற்பத் தித் தரத்தை மேம்படுத்துவதனையும் நோக்கங்களாகக் கொண்டிருந்தன.

**நெல்**

குடிமதிப்பு புள்ளி விபரத் திணைக்களத்தினால் 1992 இல் நெல் உற்பத்தி 23.4 இலட்சம் மெற்றிக் தொன்கள் (1,120 இலட்சம் புசல் நெல்) என மதிப் பிடப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டினைவிட 2 சதவீதம் குறைவானதாக இருந்தது. உற்பத்தியில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சி முழுவதற்கும் 1992 இல் சிறு போகத்தின் உற்பத்தியில் ஏற்பட்ட 15 சதவீத வீழ்ச்சியே வகை கூறியது. ஆண்டின் முதற் பகுதியில் நிலவிய வரட்சி நிலைமைகளின் காரணமாகச் சிறு போகத்தில் விதைக்கப்பட்ட மற்றும் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு குறைந்தமை இவ்வாண்டின் உற்பத்தியின் செயலாற்றத்தில் கடுமையான பாதிப் பினை ஏற்படுத்தியது.

1991/92 பெரும்போகத்தில் நெல் உற்பத்தி 16.3 இலட்சம் மெற்றிக் தொன்களாக (780 இலட்சம் புசல்கள்) மதிப்பிடப்பட்டதுடன் முன்னைய பெரும்போகத்தின் உற்பத்தியிலும் பார்க்க 5 சதவீதம் உயர்ந்ததாகக் காணப் பட்டது. பெரும்போகத்தின் சராசரி விளைச்சல் வீழ்ச்சியடைந்தபோதிலும், உற்பத்தி அதிகரித்தமைக்கு விதைக்கப்பட்ட மற்றும் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். முன்னைய ஆண்டினைப் போலவே பெரும்போகத்தில் உயர்ந்தளவு உற்பத்தியைப் பதிவுசெய்த குருநாகல் மாவட்டத்தின் உற்பத்தி மட்டம் 224,000 மெற்றிக் தொன்களாக விளங்கி பெரும்போகத்தின் மொத்த உற்பத்தியில் கிட்டத்தட்ட 14 சதவீதப் பங்குக்கு வகை கூறியது.

1991 இல் 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த சிறுபோகத்தின் நெல் உற்பத்தி, 1992 இல் மேலும் 15 சதவீதத்தினால் 7.1 இலட்சம் மெற்றிக் தொன்களுக்கு (340 இலட்சம் புசல்கள்) வீழ்ச்சியடைந்தது. சிறுபோகத்தில் ஏற்பட்ட இத்தகைய வீழ்ச்சிக்கு ஆண்டின் முற்பகுதியில் நிலவிய கடுமையான வரட்சி நிலைமைகளினால் விதைக்கப்பட்ட நிலப்பரப்பினதும் அறுவடை செய்யப் பட்ட நிலப்பரப்பினதும் அளவு குறைந்தமையே காரணமாகும். எனினும், 1992 சிறுபோகத்தில் சராசரி விளைச்சல் முன்னைய சிறுபோகத்தைவிட உயர்ந்த தாகக் காணப்பட்டது.

1992 இல் எக்டேயருக்கான ஆண்டுச் சராசரி விளைச்சல் 3,428 கிலோக் கிறாம்களாக மதிப்பிடப்பட்டதுடன் முன்னைய ஆண்டின் சராசரி விளைச்சலிலும் பார்க்கச் சிறிதளவால் உயர்ந்து காணப்பட்டது. 1991/92 பெரும்போகத்தின் சராசரி விளைச்சல் முன்னைய பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில் 3,512 கிலோக்கிறாம்களுக்கு 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருக்கையில் சிறுபோகத் தின் சராசரி விளைச்சல் எக்டேயர் ஒன்றுக்கு 3,252 கிலோக்கிறாம்களுக்கு 7 சதவீதத்தினால் அதிகரித்தது. உடவளவைப் பிரதேசம் எக்டேயர் ஒன்றுக்கு 5,005 கிலோக்கிறாம்கள் கொண்ட உயர்ந்த சராசரி விளைச்சலைப் பதிவு செய்தமையின் மூலம் மீண்டும் முதலிடத்தைப் பெற்றதுடன் மகாவலி எச்

பிரதேசம் இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டது. உடவளைவைப் பிரதேசம் தொடர்ச்சியாக ஏழாவது ஆண்டாகச் சிறுபோகத்தில் மிக உயர்ந்த சராசரி விளைச்சலைப் பதிவு செய்தது.

1991/92 பெரும்போகத்தில் மழையை நம்பிய பிரதேசங்களின் சராசரி விளைச்சல் 3 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் பெரிய, சிறிய நீர்ப்பாசனப் பிரதேசங்களின் சராசரி விளைச்சல் முறையே 3 சதவீதத்தினாலும், 12 சத வீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தது. 1992 இன் சிறுபோகத்தில் அனைத்து மூன்று வகைகளினதும் சராசரி விளைச்சல் முன்னைய சிறுபோகத்துடன் ஒப்பிடுகையில் அதிகரித்திருந்தன. இதன்படி 1992 இல் மழையை நம்பிய பிரதேசங்களினதும், சிறு நீர்ப்பாசனப் பிரதேசங்களினதும் சராசரி விளைச்சல் முறையே 22 சத வீதத்தினாலும், 9 சதவீதத்தினாலும் அதிகரித்திருக்கையில் பெரிய நீர்ப்பாசனப் பிரதேசங்களின் சராசரி விளைச்சல் முன்னைய சிறுபோகத்துடன் ஒப்பிடும்போது சிறிதளவால் உயர்ந்திருந்தது.

முன்னைய ஆண்டில் 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்த நெல் விதைக் கப்பட்ட மொத்த நிலப்பரப்பு 1992 இல் மேலும் 2 சதவீதத்தினால் வீழ்ச்சி யடைந்து 803,250 எக்டேயர்களாக விளங்கியது. 1991/92 பெரும்போகத்தில் நெல் விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு 10 சதவீதத்தினால் 548,190 எக்டேயர்களுக்கு அதிகரித்த வேளையில் சிறுபோகத்தில் நெல் விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு 255,060 எக்டேயர்களுக்கு 19 சதவீதத்தினால் வீழ்ச்சி யடைந்தது.

1991 இல் 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்த அறுவடை செய்யப் பட்ட மொத்த நிலப்பரப்பு 1992 இல் மேலும் 3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 766,106 எக்டேயர்களாக விளங்கியது. எனினும் 1991/92 பெரும்போகத் தில் அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 8 சதவீதத்தால் அதிகரித்து 522,786 எக்டேயர்களாக விளங்குகையில் சிறுபோகத்தில் அறுவடை செய்யப் பட்ட நிலப்பரப்பு 21 சதவீதத்தினால் கணிசமானளவு வீழ்ச்சியடைந்துமொத்தத் தில் இவ்வாண்டில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. 1990/91 பெரும்போகத்தில் 4 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்த பயிரிழப்பின் அளவு 1991/92 பெரும்போகத் தில் 5 சதவீதத்திற்கு அதிகரித்தவேளையில் சிறுபோகத்தின் பயிர் இழப்பு 1991 இன் 3 சதவீதத்திலிருந்து 1992 இல் 5 சதவீதத்திற்கு அதிகரித்தது.

தேசிய வளமாக்கிச் செயலகத்தின்படி 1992 இல் நெற்றுறைக்கான வள மாக்கி வழங்கல்கள் முன்னைய ஆண்டின் வழங்கலைவிட 8 சதவீதத்தால் உயர்ந்து 193,000 மெற்றிக் தொன்களாக விளங்கியது.

1992 இல் நெற்சந்தைப்படுத்தும் சபையின் (நெ.ச.ச.) நெற் கொள்வனவு 7,000 மெற்றிக் தொன்களாக மட்டும் விளங்கியது. இது மொத்த நெல் உற்பத்தி யின் 1 சதவீதத்திற்கும் குறைவானதாகும். 1992 இல் நெல்லின் உத்தரவாத விலை புசலொன்றுக்கு ரூ. 136 ஆக மாற்றமின்றிக் காணப்பட்டது.

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழ் 1991 இல் இரண்டு மடங்கு அதிகரிப்பைப் பதிவுசெய்த நெல்துறைக்கு வழங்கப் பட்ட கொடுகடன்கள் 1992 இல் 16 சதவீதத்தால் ரூ. 6,180 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. 1991/92 பெரும்போகம், 1992 சிறுபோகம் ஆகிய இரு

அட்டவணை 1.12

## நெல்துறை மீதான புள்ளி விபரங்கள் 1991—1992

| விடயம் | அலகு | 1991 (அ) | | | 1992 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்தப் பரப்பளவு ... | '000 எக்டேயர்கள் | 501 | 316 | 817 | 548 | 255 | 803 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ. ப. இ. | 512 | 222 | 734 | 484 | 134 | 618 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்தப் பரப்பளவு ... | '000 எக்டேயர்கள் | 483 | 308 | 791 | 523 | 243 | 766 |
| எக்டேயருக்கான விளைச்சல் (இ) ... | கி. கிறாம்கள் | 3,620 | 3,048 | 3,398 | 3,512 | 3,252 | 3,428 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய பரப்பளவு ... | '000 எக்டேயர்கள் | 429 | 274 | 703 | 464 | 218 | 682 |
| உற்பத்தி ... | '000மெ. தொன்கள் ('000புசல்கள்) | 1,554 (74,485) | 835 (39,986) | 2,389 (114,471) | 1,630 (78,155) | 710 (34,029) | 2,340 (112,184) |
| உ.வி.தி. மீழ் கொள்வனவு செய்யப்பட்டவை (ஈ) ... | '000மெ. தொன்கள் | 44 | — | 44 | 6 | 1 | 7 |
| அரிசி இறக்குமதி ... (நெல்லிற்குச் சமன்) ... | '000மெ. தொன்கள் ( „ ) | — (—) | — (—) | 132 (189) | — (—) | — (—) | 210 (300) |

மூலங்கள்: குடிமதிப்பு புள்ளி விபரத்திணைக்களம்,
வேளாண்மைத் திணைக்களம்,
வேளாண்மை அபிவிருத்தி, ஆராய்ச்சி அமைச்சு
நெற் சந்தைப்படுத்தும் சபை,
இலங்கைச் சுங்கம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தியமைக்கப்பட்டது.

(ஆ) தற்காலிகமானவை.

(இ) பெரும்போக சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு, குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தி லிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது. அத்தரவுகள் பயிர் அறுவடை அளவீடுகள் அடிப்படையில் அமைந்தனவாகும். அதேவேளையில், மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் மொத்த விளைவு கணக்கிடப்படுகிறது.

(ஈ) ஓகத்திலிருந்து திசெம்பர் காலப்பகுதியில் சிறுபோக அறுவடை கொள்வனவு செய்யப்பட்டவேளையில் சனவரியிலிருந்து யூலை காலப்பகுதியில் பெரும்போக நெல் அறுவடை கொள்வனவு செய்யப்பட்டது.

போகங்களுக்கும் என வேளாண்மை நம்பிக்கை நிதியத்தினால் வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகை ரூ. 490 இலட்சமாக விளங்கியது. இது முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட தொகையைவிட 16 சதவீதம் குறைவானதாகும். பயிர்ச்செய்கையாளர்களில் மிகவும் உதவி தேவைப்படுவர்மீது முக்கிய கவனம் செலுத்துவதனைக் கருத்திற் கொண்டு 1992 சிறுபோகத்திலிருந்து மழையை நம்பிய பிரதேசங்களுக்கும், நீர்ப்பாசனப் பிரதேசங்களுக்கும் வழங்கப்பட்ட,

வேளாண்மை நம்பிக்கை நிதியத்தின் தொழிற்பாட்டை மட்டுப்படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

1992 இல் அரிசி இறக்குமதிகள் முன்னைய ஆண்டின் இறக்குமதிகளுடன் ஒப்பிடுகையில் 59 சதவீதத்தால் அதிகரித்து 210,000 மெற்றிக் தொன்களாக விளங்கியது.

**சீனி**

1991 இல் 66,450 மெற்றிக் தொன்களாக விளங்கி உச்சமட்ட உற்பத்தியைப் பதிவுசெய்த சீனி உற்பத்தி 1992 இல் 10 சதவீதத்தால் 59,700 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டில் நிலவிய கடுமையான வரட்சி நிலை காரணமாகக் கிடைக்கத்தக்கதாக இருந்த ஆலையிடப்பட்ட கரும்பின் அளவு குறைந்திருந்தமையின் விளைவாக சீனியின் வெளியீட்டில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டது. உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கியமாக பெல்வத்தையின் உற்பத்தி 1991 இன் 43,964 மெற்றிக் தொன்களிலிருந்து 34,217 மெற்றிக் தொன்களுக்கு 22 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையிலும் கந்தளாய் உற்பத்தி 1991 இன் 2,558 மெற்றிக் தொன்களிலிருந்து 1992இல் 2,387 மெற்றிக் தொன்களுக்கு 7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையிலும் பிரதிபலிக்கப்பட்டது. எனினும், ஆய்வுக்குரிய இவ்வாண்டில் செவனகல உற்பத்தி 27 சதவீதத்தால் 13,576 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தவேளையில் இங்குரானையின் உற்பத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2 சதவீதத்தால் சிறிதளவு உயர்ந்து 9,520 மெற்றிக் தொன்களாக விளங்கியது.

தொடர்ச்சியாக இரு ஆண்டுகள் அதிகரித்த பெல்வத்தை தொழிற்சாலையின் சீனி உற்பத்தி 1992 இல் வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக 1991 இல் நாட்டின் மொத்தச் சீனி உற்பத்தியில் 66 சதவீதத்திற்கு வகைகூறிய பெல்வத்தை தொழிற்சாலையின் பங்கு 1992 இல் 57 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1992 இல் தொடர்ந்தும் மூன்றாவது ஆண்டாக அதிகரித்த உற்பத்தியைக் கொண்டு விளங்கிய செவனகல தொழிற்சாலையின் உற்பத்தி நாட்டின் மொத்த உற்பத்தியில் 23 சதவீதத்திற்கு வகைகூறியது.

ஆலையிடப்பட்ட கரும்பின் அளவு அதிகரித்தமை மற்றும் சீனி பெறும் வீதத்தில் முன்னேற்றம் காணப்பட்டமை என்பன செவனகலையின் சீனி உற்பத்தி அதிகரிப்பிற்கு உதவின. சீனி பெறல் வீதத்தில் முன்னேற்றம் காணப்பட்ட போதும் பெல்வத்தையின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தமைக்குக் கிடைக்கத்தக்கதாக இருந்த கரும்பின் அளவு குறைந்தமையே முக்கிய காரணமாகும். 1992 இல் பெல்வத்தையின் ஆலையிடப்பட்ட கரும்பினளவு 27 சதவீதத்தால் கணிசமானளவு வீழ்ச்சியடைந்து 409,727 மெற்றிக் தொன்களாக விளங்கியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது கந்தளாய், இங்குரான தொழிற்சாலைகளின் சீனி பெறல் விகிதம் வீழ்ச்சியடைந்தது. எனினும், நான்கு தொழிற்சாலைகளினதும் பொதுவான சீனி பெறல் விகிதம் 1991 இன் 7.81 சதவீதத்திலிருந்து 1992 இல் 8.17 சதவீதத்திற்கு முன்னேற்றம் அடைந்து காணப்பட்டது. முன்னைய ஆண்டின் 8.63 சதவீதத்துடன் ஒப்பிடும்போது செவனகல தொடர்ந்தும் மூன்றாவது ஆண்டாக 9.23 சதவீதம் கொண்ட மிகச் சிறந்த சீனி பெறல் வீதத்தைப் பதிவு செய்தது.

நான்கு சீனிக் கூட்டு நிலையங்களும், அவற்றின் காணி ஒதுக்கீட்டாளர் களுடன் கூட்டாக முகாமைப்படுத்திய கரும்புச் செய்கையின் கீழான மொத்த நிலப்பரப்பு (முளைவிட்டது உட்பட) 1992 இல் 12 சதவீதத்தால் அதிகரித்து 14,517 எக்டேயர்களாக விளங்கியது. முன்னைய ஆண்டின் 44 சதவீதத்தால் உயர்ந்திருந்த செவனகல தொழிற்சாலையின் கரும்புப் பயிர்ச் செய்கையின் கீழான நிலப்பரப்பு 1992 இல் மேலும் 33 சதவீதத்தால் அதிகரித்து 3,777 எக்டேயர் களாக விளங்கியது. பெல்வத்தை தொழிற்சாலையின் கரும்புப் பயிர்ச்செய்கையின் கீழான நிலப்பரப்பும் 5 சதவீதத்தால் அதிகரித்து 6,007 எக்டேயர்களாக விளங்கியது.

நான்கு கரும்புத் தொழிற்சாலைகளினதும் ஒரு எக்டேயருக்குரிய பொதுவான கரும்பின் சராசரி விளைச்சல் 17 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 48.7 மெற்றிக் தொன்களாக விளங்கியது. இங்குரான தவிர்ந்த ஏனைய மூன்று தொழிற்சாலை களினதும் சராசரி விளைச்சல் கணிசமான வீழ்ச்சிகளான முறையே பெல்வத்தை 21 சதவீத வீழ்ச்சியையும், செவனகல 23 சதவீத வீழ்ச்சியையும், கந்தளாய் 31 சதவீத வீழ்ச்சியையும் கொண்டிருந்தன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இங்குரான 5 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது.

1992 இல் நான்கு தொழிற்சாலைகளினாலும் அறுவடை செய்யப்பட்ட கரும்பின் மொத்த நிலப்பரப்பு 10,531 எக்டேயர்களாக விளங்கி 27 சதவீதத் தால் கணிசமானளவு அதிகரித்தது. செவனகல, கந்தளாய், பெல்வத்தை ஆகிய வற்றினால் அறுவடை செய்யப்பட்ட கரும்பின் நிலப்பரப்பு 57 சதவீதத்தாலும், 44 சதவீதத்தாலும், 24 சதவீதத்தாலும் அதிகரித்து முறையே 2,090 எக்டேயர் களாகவும், 1,333 எக்டேயர்களாகவும், 5,241 எக்டேயர்களாகவும் விளங்கின.

நான்கு தொழிற்சாலைகளினாலும் அறுவடை செய்யப்பட்ட கரும்பின் மொத்த நிலப்பரப்பு கணிசமானளவு அதிகரித்திருந்தபோதிலும் அறுவடை செய் யப்பட்ட கரும்பின் அளவு 6 சதவீதத்தால் மட்டும் அதிகரித்து 512,506 மெற்றிக் தொன்களாக விளங்கியது. 1991 இல் 6 சதவீத அதிகரிப்பைக் கொண் டிருந்த செவனகலவில் அறுவடை செய்யப்பட்ட கரும்பினளவு 1992 இல் மேலும் 20 சதவீதத்தினால் அதிகரித்து 146,207 மெற்றிக் தொன்களாக விளங்கியது. பெல்வத்தையினால் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு 24 சதவீதத்தினால் அதிகரித்தபோதும் அறுவடை செய்யப்பட்ட கரும்பினளவு 1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 234,968 மெற்றிக் தொன்களாக விளங்கியது. பெல்வத்தைத் தொழிற்சாலையினால் அறுவடை செய்யப்பட்ட கரும்பின் அளவு வீழ்ச்சியடைந் தமைக்குக் கடுமையான வரட்சியின் காரணமாகக் கரும்புப் பயிர் தாக்கப்பட்ட மையே முக்கிய காரணமாகும். இங்குரானையினால் அறுவடை செய்யப்பட்ட கரும்பினளவு 8 சதவீதத்தால் அதிகரித்து 96,419 மெற்றிக் தொன்களாக விளங்கியவேளையில் சந்தளாயில் அறுவடை செய்யப்பட்ட கரும்பினளவு சிறி தளவு அதிகரிப்பைக் காட்டி 34,912 மெற்றிக் தொன்களாக விளங்கியது.

## அட்டவணை 1.13

### சீனி உற்பத்தி மீதான புள்ளி விபரங்கள் 1991-1992

| விடயம் | அலகு | இங்குரான சீனித் தொழிற்சாலை | | கந்தளாய் சீனித் தொழிற்சாலை | | செவனகல சீனித் தொழிற்சாலை | | பெல்வத்தை சீனித் தொழிற்சாலை | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1991 | 1992 (ஆ) | 1991 | 1992 (ஆ) | 1991 | 1992 (ஆ) | 1991 | 1992 (ஆ) | 1991 | 1992 (ஆ) |
| 1. கரும்பு பயிரிடப்பட்ட நிலப்பரப்பு (முளை தோன்றியது) (அ) ... | எக்டேயர்கள் | 2,396 | 2,538 | 1,988 | 2,195 | 2,845 | 3,777 | 5,707 | 6,007 | 12,936 | 14,517 |
| 2. அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு(அ)... | எக்டேயர்கள் | 1,811 | 1,867 | 923 | 1,333 | 1,335 | 2,090 | 4,220 | 5,241 | 8,289 | 10,531 |
| 3. அறுவடை செய்யப்பட்ட கரும்பு (அ) ... | மெ.தொன்கள் | 89,043 | 96,419 | 34,894 | 34,912 | 121,702 | 146,207 | 238,086 | 234,968 | 483,725 | 512,506 |
| 4. தனியாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கரும்பு ... | மெ. தொன்கள் | 45,896 | 42,995 | 6.0 | — | 661 | 848 | 320,536 | 174,759 | 367,099 | 218,602 |
| 5. பிழியப்பட்ட கரும்பின் அளவு ... | மெ.தொன்கள் | 134,939 | 139,414 | 34,900 | 34,912 | 122,363 | 147,055 | 558,622 | 409,727 | 850,824 | 731,108 |
| 6. சராசரி விளைச்சல் (அ) ... | மெ. தொன்கள்/ எக்டேயர்கள் | 49.17 | 51.64 | 37.80 | 26.19 | 91.16 | 69.96 | 56.42 | 44.83 | 58.36 | 48.67 |
| 7. உற்பத்தி செய்யப்பட்ட சீனி (கூட்டப்பட்டவை தவிர்ந்த) ... | மெ.தொன்கள் | 9,374 | 9,520 | 2,558 | 2,387 | 10,554 | 13,575 | 43,964 | 34,217 | 66,450 | 59,700 |
| 8. சீனி பெறப்பட்ட வீதம் ... | % | 6.94 | 6.83 | 7.33 | 6.84 | 8.63 | 9.23 | 7.87 | 8.35 | 7.81 | 8.17 |

(அ) முதன்மைத் தோட்டங்களையும் ஒதுக்கீட்டாளர்களையும் உள்ளடக்கும்.
(ஆ) தற்காலிகமானவை.

மூலங்கள்: வரையறுக்கப்பட்ட பெல்வத்தைச் சீனிக் கைத்தொழில்கள்
வரையறுக்கப்பட்ட கந்தளாய் சீனிக் கைத்தொழில்கள்
வரையறுக்கப்பட்ட செவனகல சீனிக் கைத்தொழில்கள்
வரையறுக்கப்பட்ட இங்குரான சீனிக் கைத்தொழில்கள்

1990 இலும் 1991 இலும் கணிசமானளவு அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த தனிப்பட்ட பயிர்ச்செய்கையாளர்களினால் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்ட கரும்பினளவு 1992 இல் 40 சதவீதத்தால் 218,602 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. தனிப்பட்ட பயிர்ச்செய்கையாளரிடமிருந்து செவனகலயி னால் கொள்வனவு செய்யப்பட்ட கரும்பின் அளவு 28 சதவீதத்தினால் 848 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தவேளையில் பெல்வத்தைத் தொழிற்சாலை யினால் கொள்வனவு செய்யப்பட்ட கரும்பின் அளவு 45 சதவீதத்தினால் 174,759 மெற்றிக் தொன்களுக்குக் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. 1992 இல் இங்குராணையின் தனிப்பட்ட கரும்புக் கொள்வனவும் 6 சதவீதத்தால் 42,995 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. நான்கு தொழிற்சாலைகளினாலும் கொள்வனவு செய்யப்பட்ட தனியார் கரும்பு அனைத்திலும் 80 சதவீதத்திற்குப் பெல்வத்தை வகை கூறியது.

**சிறு உணவுப் பயிர்கள்**

நீர்ப்பாய்ச்சல் பிரதேசங்களில் செறிவாகப் பயிரிடப்படும் உருளைக்கிழங்கு, மிளகாய், சின்ன வெங்காயம் போன்ற உயர் பெறுமதியுடைய சில பயிர்கள் தவிர்ந்த ஏனைய பெரும்பாலான சிறு உணவுப் பயிர்கள் சிறிய பரவலான காணித் துண்டுகளில் அல்லது வீட்டுத் தோட்டங்களில் மழை நீரின் உதவியுடன் பயிர் செய்யப்படுகின்றன. சிறு உணவுப் பயிர்களின் இந்த வகையிலான பயிர்ச் செய்கையானது பயிரிடப்படும் நிலப்பரப்பு மற்றும் உற்பத்தி மீதான நம்பகமான தரவுகளைச் சேகரிப்பதை மிகவும் கடினமாக்குகின்றது. எனவே சிறு உணவுப் பயிர்களின் செயலாற்றம் தொடர்பான எத்தகைய பகுப்பாய்வும் தற்காலிக மதிப்பீடுகளையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது.

வேளாண்மை அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சினால் வழங்கப்பட்ட தரவு களின்படி, 1992 இல் சிறு உணவுப் பயிர்களின் செயலாற்றமானது பெரும்பாலும் கலப்பானதாகக் காணப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டின் உற்பத்தியுடன் ஒப் பிடுகையில் பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், குரக்கன், உருளைக்கிழங்கு என்பனவற்றின் உற்பத்தி முறையே 28 சதவீத, 13 சதவீத, 10 சதவீத, 9 சதவீத அதிகரிப்புக்களைப் பதிவு செய்தது. உற்பத்தியில் குறிப்பிடத்தக்க இவ்விரிவாக்கத்துக்கு இப் பயிர்களின் கீழான நிலப்பரப்பில் காணப்பட்ட அதிகரிப்பு காரணமாக அமைந்தது.

அதேவேளை, ஆய்வுக்குரிய காலத்தில் பயறு, சோயா அவரை, செத்தல் மிளகாய், எள்ளு, உழுந்து என்பனவற்றின் உற்பத்தி முறையே 35 சதவீத, 30 சதவீத, 29 சதவீத, 28 சதவீத, 19 சதவீத வீழ்ச்சியினைப் பதிவு செய்தது. இப் பயிர்களின் வெளியீட்டின் கணிசமான வீழ்ச்சிக்குச் சராசரி விளைச்சல் குறைவடைந்தமையும் பயிர்ச் செய்கைக்குட்படுத்தப்பட்ட நிலப்பரப்புக் குறை வடைந்தமையுமே காரணமாகும்.

1992 இல் சிறு உணவுப் பயிர்த்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 14 சதவீதத்தால் 43,600 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தன.

ஒன்பது தெரிந்தெடுக்கப்பட்ட சிறு உணவுப் பயிர்கள் தொடர்பான நெற் சந்தைப்படுத்தும் சபையினால் தொழிற்படுத்தப்பட்ட அடிமட்ட விலைத்திட்டம் 1992 இலும் தொழிற்பட்டது. எனினும், இவற்றின் விலைகள் முன்னைய ஆண்டைப் போலவே அதே மட்டத்தில் மாறாது காணப்பட்டன.

அட்டவணை 1.14

**துணை உணவுப் பயிர்களுக்கான அடிமட்ட விலைத்திட்டம்**

(கிலோக்கிறாமொன்றிற்கு ரூபா)

| பயிர் | 1992 சனவரி 1 இலிருந்து 1992 திசெம்பர் 31 வரை |
|---|---|
| சோளம் ... ... ... ... | 5.25 |
| குரக்கன் ... ... ... ... | 5.00 |
| நிலக்கடலை (கோதுடன்) ... ... ... | 8.15 |
| சோயா அவரை ... ... ... ... | 7.30 |
| எள்ளு | |
| கறுப்பு ... ... ... ... | 8.00 |
| வெள்ளை ... ... ... ... | 9.90 |
| மிளகாய் (செத்தல்) | |
| மிளகாய் I ... ... ... ... | 32.00 |
| மிளகாய் II ... ... ... ... | 30.00 |
| தட்டைப் பயறு ... ... ... ... | 9.00 |
| பாசிப்பயறு ... ... ... ... | 12.00 |
| உழுந்து ... ... ... ... | 7.50 |

மூலம்: வேளாண்மை அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சு.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1992 இல் நெற் சந்தைப்படுத்தும் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட சோளத்தின் அளவு 47 சதவீதத்தினால் 49 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இதேவேளை, கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்தின் உருளைக்கிழங்கு கொள்வனவு 1991 இன் 2 மெற்றிக் தொன்களிலிருந்து 1992 இல் 73 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தவேளையில், பெரிய வெங்காயத்தின் கொள்வனவு மூன்று மடங்கு அதிகரிப்பைப் பதிவுசெய்து 4,401 மெற்றிக் தொன்களாக விளங்கியது. 1992 இல் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்தின் பயறுக் கொள்வனவு 29 சதவீதத்தினால் 2,824 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. செத்தல் மிளகாய் உற்பத்தியில் காணப்பட்ட வீழ்ச்சியின் விளைவாகக் கூ.மொ.வி. நிலையம் 1992 இல் 6,985 மெற்றிக் தொன்கள் செத்தல் மிளகாயை இறக்குமதி செய்தது. இதேவேளை வெளியீட்டில் அதிகரிப்பொன்றின் காரணமாக 1992 இல் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்தின் பெரிய வெங்காய இறக்குமதி 27 சதவீதத்தினால் 35,507 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

**மீனும் கால்நடையும்**

1992 இல் மீன் உற்பத்தி 206,168 மெற்றிக் தொன்கள் எனக் கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் அமைச்சினால் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இதனை முன்னைய ஆண்டின் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் 4 சதவீத அதிகரிப்பைக் குறித்துக் காட்டியது. இந்த அதிகரிப்புக்கு கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலைமைகள் முன்னேற்றமடைந்தமையும், கூடுதலான பலநாட் படகுகளின் பாவனை மற்றும் வேளாண்மைப் புத்தாக்கக் கொடுகடன் திட்டத்தின் கீழான கடன் பகிர்ந்தளிப்புக்களில் உள்ளடக்கப்பட்ட

பலதரப்பட்ட உதவுதொகைத் திட்டங்களின்கீழ் உதவுதொகைக் கொடுப்பனவு களில் கணிசமான அதிகரிப்பு போன்றவற்றின் மூலம் கடற்றொழில் நீர்வாழ் உயிரின மூலவளங்கள் அமைச்சினால் தொடக்கி வைக்கப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளும் முதன்மைக் காரணங்களாகக் குறிப்பிடப்படுகின்றன.

மொத்த மீன் உற்பத்தியில் 79 சதவீதத்துக்கு வகைகூறும் கரையோர மீன்பிடித்துறை 1991 இன் 159,151 மெற்றிக் தொன்களிலிருந்து 1992 இல் 163,168 மெற்றிக் தொன்களுக்கு அதனது உற்பத்தியை அதிகரித்தது. கரை கடந்த துணைத்துறையின் மீன் உற்பத்தி 46 சதவீதத்தால் 22,000 மெற்றிக் தொன்களுக்கு உயர்வடைந்தது. மாறாக உள்ளூர் மீன்பிடித்துறையின் வெளியீடு 12 சதவீதத்தினால் 21,000 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. கடந்த காலங்களைப் போன்றே தனியார்துறையானது மொத்த மீன் உற்பத்தியில் பெரும் பங்கிற்குத் தொடர்ந்தும் வகை கூறியது. 1992 இல் இலங்கைக் கடற் றொழில் கூட்டுத்தாபனத்தின் மொத்த மீன் வழங்கல் 1,893 மெற்றிக் தொன்கள் ஆக மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டைவிட 2 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் உறைநீர்க்கட்டி உற்பத்தி 5,032 மெற்றிக் தொன்களாக விளங்கி 1991 இன் உற்பத்தியைவிட 16 சதவீதம் குறைவானதாகக் காணப்பட்டது.

1992 இல் சிறப்பு மீன்பிடி அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் பலவற்றின் வேலைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. கிழக்குக் கரையோரக் கடற் றொழில் அபிவிருத்தித் திட்டம் மேற்குக் கரையோரக் கடற்றொழில் அபிவிருத் தித் திட்டம் என்பனவற்றை இவை உள்ளடக்கியிருந்தன.

கரையோர மீன்பிடித்துறையின் புதிய படகுகளின் வழங்கல்களுக்காகவும், மரபுவழிக் கலங்களைப் பொறிமுறைப்படுத்துவதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட உதவுதொகைக் கொடுப்பனவு 1991 இன் ரூ. 330 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1992 இல் 85 சதவீதத்தினால் ரூ. 610 இலட்சத்திற்கு அதிகரித்தது. 1992 இல் பல்வேறு உதவுதொகைத் திட்டங்களின்கீழ்க் கரையோர மீன்பிடித் துறைக்கு 779 படகுகளும், 1,614 மரபுவழிக் கலங்களும் வழங்கப்பட்டன. இவ்வாண்டில் கடற்றொழில் நடவடிக்கையின் முகாமைத்துவம் முக்கியமாகக் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களினூடாக மேம்பாடுற்றது. 1992 இல் உருவாக்கப்பட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 2 சதவீதத்தால் 806 இற்கு அதிகரித்தது. இதன் விளைவாகக் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த உறுப்புரிமை 1991 இன் 75,000 இலிருந்து 1992 இல் 83,627 இற்கு அதிகரித் தது. உற்பத்தி மட்டங்களின் அதிகரிப்பின் மத்தியிலும் 1992 இல் அனைத்து வகை மீன்களினதும் சராசரி விலை அதிகரித்தது.

1992 இல் கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோண மலை மாவட்டங்களின் உற்பத்தி நீங்கலாகப் பால் உற்பத்தி 3,020 இலட்சம் இலீற்றர்கள் எனக் குடிமதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் தற்காலிகமாக மதிப்பிட்டுள்ளதோடு முன்னைய ஆண்டினைவிட 8 சதவீத அதிகரிப்பினையும் கொண்டிருந்தது. 1992 இல் வரையறுக்கப்பட்ட மில்க் இன்டஸ்றீஸ் ஒவ் லங்கா கம்பெனியினால் (மில்கோ) சேகரிக்கப்பட்ட பாலின் அளவு 490 இலட்சம் இலீற்றர் ஆக விளங்கி 1991 உடன் ஒப்பிடுகையில் 4 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. மாறாக, வரையறுக்கப்பட்ட நெஸ்லே லங்காவினால் சேகரிக்கப் பட்ட பாலின் அளவு 340 இலட்சம் இலீற்றர்களாக விளங்கி 1991 உடன்

அட்டவணை 1.15

**மீன் உற்பத்தி 1988—1992**

மெற்றிக் தொன்களில்

| துணைத்துறை | | 1988 | 1989 | 1990 | 1991 | 1992(அ) |
|---|---|---|---|---|---|---|
| கரையோர | ... | 155,099 | 157,411 | 134,132 | 159,151 | 163,168 |
| ஆழ்கடலும் கரைக்கு அப்பாலும் | ... | 4,425 | 8,155 | 11,666 | 15,080 | 22,000 |
| உள்நாட்டு | ... | 38,012 | 39,720 | 31,265 | 23,832 | 21,000 |
| மொத்தம் | ... | 197,536 | 205,286 | 177,063 | 198,063 | 206,168 |

மூலம்: கடற்றொழில் நீர்வாழ் உயிரின மூலவளங்கள் அமைச்சு.

(அ) தற்காலிகமானவை.

ஒப்பிடுகையில் 30 சதவீத கணிசமான அதிகரிப்பைப் பதிவு செய்தது. 1992 இலும் பாலின் உற்பத்தியாளர் விலை இலீற்றர் ஒன்றிற்கு ரூ. 8.50 ஆக மாறாது காணப்பட்டது.

1992 இல் முட்டை உற்பத்தி (கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத் தீவு, திருகோணமலை மாவட்டங்கள் நீங்கலாக) 7,940 இலட்சம் எனக் குடிமதி ப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ள தோடு முன்னைய ஆண்டைவிட 1 சதவீத சிறிதளவு அதிகரிப்பையும் காட்டியது.

முக்கிய விலங்குத்தீன் உற்பத்தியாளர்களால் வழங்கப்பட்ட தற்காலிகத் தரவுகளின்படி, 1992 இல் மொத்த விலங்குத்தீன் உற்பத்தி 33 சதவீதத்தால் 179,647 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. இவ்வதிகரிப்புக்கு கால்நடை வளர்ப்புக் கைத்தொழிலின் விரிவாக்கம் காரணமாக ஏற்பட்ட அதிகரித்த கேள்வியே காரணமாகும்.

**வளமாக்கி**

முன்னைய ஆண்டின் ஒப்பிடத்தக்க காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் 1992 இல் பலதரப்பட்ட பயிர்த்துறைகளுக்குமான மொத்த வளமாக்கி வழங்கல் 1 சதவீதத்தால் 459,400 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. மொத்த வழங்கலில் மிகப் பெரிய பங்கான 42 சதவீதத்துக்கு வகைகூறும் நெற்றுறைக்கான வழங்கல்கள் 8 சதவீதத்தால் அதிகரித்தன. ஆய்வுக்குரிய காலப் பகுதியில் தெங்குத் துறைக்கான வழங்கல்களும் 17 சதவீதத்தால் உயர்வடைந்தன. மாறாக தேயிலை, இறப்பர், சிறு உணவுப் பயிர்கள், சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஆகிய துறைகளுக்கான வளமாக்கி வழங்கல்கள் முறையே 8 சதவீதத்தாலும், 7 சதவீதத்தாலும், 14 சதவீதத்தாலும், 35 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன.

அட்டவணை 1.16

**பயிர்களின் படியான வளமாக்கி வழங்கல்கள் 1989–1992**

'000 மெற்றிக் தொன்கள்

| பயிர் | 1989 | 1990 | 1991 | 1992(அ) |
|---|---|---|---|---|
| 1. நெல் ... ... | 238.1 | 161.2 | 179.3 | 193.3 |
| 2. தேயிலை ... ... | 127.9 | 134.1 | 118.9 | 108.8 |
| 3. இறப்பர் ... ... | 22.6 | 22.2 | 13.7 | 12.7 |
| 4. தெங்கு ... ... | 38.5 | 23.6 | 28.8 | 33.8 |
| 5. சிறு உணவுப் பயிர்கள் ... ... | 28.7 | 46.3 | 50.7 | 43.7 |
| 6. சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ... ... | 5.6 | 7.6 | 11.1 | 7.2 |
| 7. ஏனையவை ... ... | 60.9 | 42.1 | 51.2 | 59.9 |
| மொத்தம் ... ... | 522.3 | 437.1 | 453.7 | 459.4 |

(அ) தற்காலிகமானவை. மூலம்: தேசிய வளமாக்கிச் செயலகம்.

மொத்த வழங்கலில் 66 சதவீதத்துக்கு வகைகூறிய அரசதுறையினால் வழங்கப்பட்ட வளமாக்கியின் அளவு 1992 இல் 14 சதவீதத்தால் 301,542 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தது. வரையறுக்கப்பட்ட மக்கள் வளமாக்கித் தொழில் முயற்சி, வரையறுக்கப்பட்ட வளமாக்கிச் கூட்டுநிலையம் என்பனவற்றின் வழங்கலில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க குறைப்பே இதற்கான முதன்மைக் காரணமாகும். மாறாக இவ்வாண்டில் தனியார்துறை மொத்த வியாபாரிகளினால் வழங்கப்பட்ட வளமாக்கித் தொகை 157,841 மெற்றிக் தொன்களுக்கு ஐந்து மடங்கு அதிகரிப்பைப் பதிவு செய்தது.

தேசிய வளமாக்கிச் செயலகத்தின்படி, 1992 இல் இறக்குமதி செய்யப்பட்ட வளமாக்கியின் மொத்தத் தொகை 369,619 மெற்றிக் தொன்களாக விளங்கி 1991 ஐவிட 4 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. கடந்த காலத்தில் முதன்மை வளமாக்கி இறக்குமதியாளராக விளங்கிய வரையறுக்கப்பட்ட வளமாக்கி கூட்டுநிலையம் 1992 இலும் வளமாக்கி இறக்குமதிகளில் தொடர்ந்தும் மேலாதிக்கத்தைக் கொண்டிருந்தது. 1992 இல் அதி பிரபல்யம் வாய்ந்த வளமாக்கியான யூரியாவின் இறக்குமதிகள் 28 சதவீதத்தினால் 130,860 மெற்றிக் தொன்களுக்கு கணிசமான வீழ்ச்சியினைப் பதிவு செய்தது. 1992 இல் சல்பேற்று அமோனியாவின் இறக்குமதி 92,565 மெற்றிக் தொன்களுக்குச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்த வேளையில் 1992 இல் பொட்டாசிய மியூரியேட் இறக்குமதிகள் 16 சதவீதத்தால் 76,084 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தன.

ஆண்டு முழுவதிலும் வளமாக்கி விலைகள் மாறாது உறுதியாகக் காணப்பட்டன. ஆண்டின் தொடக்கத்தில் 147,029 மெற்றிக் தொன்களாக விளங்கிய மொத்த வியாபாரிகள் வசமுள்ள வளமாக்கியின் மொத்தக் கையிருப்பு 1992 திசெம்பர் 31 இல் 92,821 மெற்றிக் தொன்களுக்குக் குறைவடைந்தது. வளமாக்கி இறக்குமதிகளின் வீழ்ச்சியின் மத்தியில் வளமாக்கி வழங்கலில் காணப்பட்ட அதிகரிப்பானது ஆண்டு முடிவில் குறைந்த கையிருப்பு நிலைமைக்குக் காரணமாயிற்று.

அட்டவணை 1.17

## மொத்த விற்பனையாளர்களின் வளமாக்கி வழங்கல்கள் 1991—1992

| துறை | 1991 | | 1992 (அ) | | அளவின் சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|---|
| | அளவு (மெற்றிக் தொன்) | % | அளவு (மெற்றிக் தொன்) | % | |
| 1. அரசதுறை ... | 349,149 | 78 | 285,307 | 62 | — 19.9 |
| 1.1 இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனம் ... | (201,262) | (45) | (166,655) | (36) | — 17.2 |
| 1.2. வரையறுக்கப்பட்ட மக்கள் வளமாக்கி முயற்சி ... | (101,187) | (21) | (68,671) | (15) | — 32.1 |
| 1.3. வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்சியல் வளமாக்கி ... | (53,772) | (12) | (49,981) | (11) | — 7.1 |
| 2. தனியார் துறை ... | 96,650 | 22 | 174,076 | 38 | + 78.4 |
| 2.1. வரையறுக்கப்பட்ட எ. பவர் அன்ட் கம்பனி ... | (49,538) | (11) | (60,528) | (13) | + 22.2 |
| 2.2. ஏனையவை ... | (47,112) | (11) | (113,548) | (25) | + 136.5 |
| மொத்தம் | 453,770 | 100 | 459,383 | 100 | + 1.2 |

(அ) தற்காலிகமானவை

மூலம் : தேசிய வளமாக்கிச் செயலகம்